வேலூர் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.ஏ.செல்வராசு.,பி.எஸ்சி.,பி.எட்.,

மு.மு.அ3/1929/2018

நாள்: 30.04.2018

பொருள் : பொதுப்பணி – கிராம நிர்வாகம் - பணிவரன்முறை – வேலூர் கோட்டம் - கிராம நிர்வாக அலுவலர்கள் திரு.கே.பிரகாஷ் மற்றும் 06 நபர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டது – கிராம நிர்வாக அலுவலர் பணியமைப்பில் பணியில் சேர்ந்த நாளில் பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கியும் உத்திரவிடுதல் - சார்பு

பார்வை:

1. வேலூர் வட்டாட்சியர் கடித எண் ந.க.அ3/1541/2018 நாள் : 15.03.2018
2. வேலூர் வட்டாட்சியர் கடித எண் ந.க.அ3/1492/2018 நாள் : 16.04.2018
3. வேலூர் வட்டாட்சியர் கடித எண் ந.க.அ3/2073/2018 நாள் : 07.04.2018
4. அணைக்கட்டு வட்டாட்சியர் கடித எண் ந.க.அ3/1541/2018 நாள் : 15.03.2018
5. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடுகள்.

--0--

வேலூர் மாவட்டம், வேலூர் வருவாய் கோட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்களாக பணிபுரிந்துவரும் கீழ்காணும் பட்டியலில் கலம்-2ல் கண்ட நபர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு தேர்வுசெய்யப்பட்டு பட்டியலில் கலம் -4ல் கண்ட நாள் முதல் பணிபுரிந்து வருகின்றனர் எனவும், தனியர்களது பணியினை கிராம நிர்வாக பணியமைப்பில் பணியில் சேர்ந்த நாளில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தை துவக்கியும் உத்திரவிட வேலூர்/அணைக்கட்டு வட்டாட்சியர் பார்வை-1 முதல் 4 வரையில் பரிந்துரை செய்துள்ளார்.

| வ.எண் | கிராம நிர்வாக அலுவலர் பெயர் | பணிபுரிந்துவரும் கிராமம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | திரு.கே. பிரகாஷ் | பென்னாத்தூர் | 08.05.2015 மு.ப. | 08.05.2015 மு.ப. |
| 2. | திரு. எஸ்.ஜெயக்குமார் | வல்லம் குருப் | 07.05.2015 மு.ப. | 07.05.2015 மு.ப. |
| 3. | திரு.கே.குமரவேலு | கொணவட்டம் | 07.05.2015 மு.ப. | 07.05.2015 மு.ப. |
| 4. | திரு.ரா.வினோத் | சேண்பாக்கம் | 29.05.2015 மு.ப. | 29.05.2015 மு.ப. |
| 5. | திரு.அ.சதிஷ்குமார் | கம்மசமுத்திரம் | 11.05.2015 மு.ப. | 11.05.2015 மு.ப. |
| 6. | திரு.மு.கணேசன் | ஒதியத்தூர் குருப் | 06.02.2017 மு.ப. | 06.02.2017 மு.ப. |
| 7. | திரு.க.சாட்லுதுரை | கரடிகுடி குருப் | 06.02.2017 மு.ப. | 06.02.2017 மு.ப. |

எனவே பார்வை-5ல் கண்ட வேலூர்/அணைக்கட்டு வட்டாட்சியரின் பரிந்துரையை ஏற்று தனியர்களின் பணியினை பட்டியலில் கலம்-5ல் கண்ட நாளில் கிராம நிர்வாக பணியமைப்பில் பணிவரன்முறை செய்தும் தனியர்களது தகுதிகாண் பருவகாலத்தை துவக்கியும் உத்திரவிடப்படுகிறது.